மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2009) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஆ) தமிழ்நாடு காவல் சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2008), மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2008)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி.

@ 14–5–2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காவல் துறைக்கான புதிய சட்டம் முன்பு அறிமுகம் செய்யப்பட்டு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் இன்று ஆய்வுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள வேளையில், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நான் சொல்ல விரும்புவது, 1861 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தக் காவல் சட்டம் என்பது வெள்ளைக்காரன் காலத்திலே கொண்டு வந்த சட்டம். இன்று காலச் சூழ்நிலைக்கேற்ப, பல மாறுதல்களுக்கு உள்ளாக்கப்பட வேண்டுமென நடுவண் அரசு சார்பிலே சொல்லப்பட்டு, உச்ச நீதிமன்றத்தின் சார்பிலே அறிவுறுத்தப்பட்டிருந்தாலும்கூட, இன்றைய தேவைக்கேற்ப, சட்டத்தைத் திருத்தியமைப்பது காலத்தின் கட்டாயமும்கூட. பெருகி வரும் குற்றங்களைத் தடுப்பது மட்டுமல்லாமல், குற்றம் வருவதற்கு முன்பே, வருமுன் காப்போம் என்று சொல்லக்கூடிய அளவிலே அதற்குண்டான ஷரத்துக்கள் எல்லாம் இடம் பெறவேண்டுமென்ற அடிப்படையிலே, இந்தக் காவல் சட்டமுன்வடிவு என்பது மிக, மிக அவசியமானது. இந்தச் சட்டத்தை, ஆய்வு செய்கையில் நிறைய சொல்ல வேண்டும் என்று அதைப்பற்றிக் குறிப்பு வைத்துக்கொண்டிருக்கிறேன். இதிலே நீங்கள் 68 பிரிவுகள் சொல்லியிருக்கிறீர்கள். இந்த 68 பிரிவுகளும் தேவையானவை என்று கருதினாலும்கூட, இந்தச் சட்டமுன்வடிவு நீண்ட, நெடிய விவாதத்திற்கு ஆளாக்கப்பட வேண்டும். குறிப்பாக, காவல் சட்ட வல்லுநர்கள் இருக்கிறார்கள். அவர்களிடத்திலே இவை வழங்கப்பட்டு, பொது மக்களின் பார்வைக்கும் இவை கொண்டு செல்லப்பட்டு, எல்லோராலும் ஆலோசிக்கப்பட்டு, நிலைத்து, நீடித்திருக்கிற ஒரு நல்ல சட்டம் தமிழ்நாட்டிற்குத் தேவை என்ற அடிப்படையிலேதான், கொண்டுவந்திருக்கிற இந்தச் சட்டமுன்வடிவை ஆய்வுக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வலியுறுத்துகிறேன். ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பட்ட பிறகும் இதை பல வல்லுநர்கள் குழுவிற்கு அனுப்பி ஆய்வு செய்து, மீண்டும் அவைமுன் வைக்க வேண்டுமென்றும் நான் பா.ம.க. சார்பிலே வலியுறுத்தி அமர்கிறேன்.

பிற்பகல் 1–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தில் திரு. பிரகாஷ் சிங் என்பவர் தொடர்ந்த வழக்கின் தீர்ப்பின்படி, புதிய காவல் சட்டத்தை இயற்றுவதற்காக தாக்கல் செய்யப்பட்டிருக்கிற இந்தச் சட்டமுன்வடிவில் 10 அத்தியாயங்களில் 68 ஷரத்துகளைக் கொடுத்திருக்கிறீர்கள். இந்தக் காவல் சட்டமானது, உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி இப்போது பீகார் போன்ற மாநிலங்களில் அமல்படுத்தப்பட்டிருக்கிறது. இருந்தாலுங்கூட, 1861 ஆம் ஆண்டு காவல் சட்டம், 1859 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட காவல் சட்டம், 1888 ஆம் ஆண்டு சென்னை மாநகர காவல் சட்டம், 1987 ஆம் ஆண்டு சென்னை மாநகர காவல் சட்டம், 1997 ஆம் ஆண்டு சென்னை மாநகர காவல் சட்டம் போன்ற சட்டங்கள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற சூழ்நிலையில் கிட்டத்தட்ட 150 ஆண்டுகளுக்கும் மேலாக நாம் பின்பற்றி வருகின்ற காவல் சட்டத்திற்குப் பதிலாக புதிய காவல் சட்டம் இயற்றுவதற்கு முன், தமிழகத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகள், மூத்த வழக்கறிஞர்கள், ஓய்வுபெற்ற நீதிபதிகள், சட்ட வல்லுநர்கள் ஆகியோருடன் கலந்து விவாதித்து, ஆய்வு செய்து, அதன் பிறகுதான் இதுபோன்ற சட்டங்களை இயற்ற வேண்டும். இதுபோன்ற முக்கியமான சட்டங்களை, இதுபோல் அவசர கோலத்தில் இயற்றுவது ஏற்புடையதல்ல. எனவே, இந்தப் புதிய காவல் சட்டத்தை இந்த அவையின் Select Committee–க்கு அனுப்பி, ஆய்வு செய்ததற்குப் பிறகு, புதிய காவல் சட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வலியுறுத்தி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திர இந்தியாவில் ஒவ்வொரு குடிமகனுடைய வாழ்க்கையைப் பாதிக்கக்கூடிய, வாழ்க்கையினுடைய ஒவ்வோர் அம்சத்தையும் தொடக்கூடிய, சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு காவல் துறைக்கு உண்டு. ஆனால், அத்தகைய காவல் துறை 19–வது நூற்றாண்டிலே நிறைவேற்றப்பட்ட, அதுவும் வெள்ளைக்காரத் துரைத்தனத்தால் உருவாக்கப்பட்ட ஒரு சட்டத்தின் மூலமாக நிருவகிக்கப்படுவது சுதந்திர இந்தியாவின் மாண்புக்கும், பெருகி வருகின்ற நம்முடைய நாட்டு மக்களுடைய பொருளாதார, சமூகத் தேவைகளுக்கும் உடன்பாடாகாது.

எனவே, நம்முடைய காவல் துறை, மாறி வருகின்ற சமூகச் சூழலுக்கேற்ப, காலத்தின் தேவைக்கேற்ப, ஒரு புதிய சட்டத்தின்மூலம் வழிநடத்தப்பட வேண்டும், வரையறுக்கப்பட வேண்டும் என்பதிலே எங்கள் யாருக்கும் மாற்றுக் கருத்து கிடையாது. நம்முடைய அரசு இன்றையதினம் இந்தச் சட்டமுன்வடிவை இங்கே ஆய்வுக்குக் கொண்டுவந்திருக்கிறது. நம்முடைய அன்றாட வாழ்க்கை, பொருளாதாரம், சமூகம், அரசியல் என்று எல்லாத் துறைகளையும் தொடக்கூடிய காவல் துறையினுடைய செயல்பாட்டை நிருவகிக்கக்கூடிய சட்டம் என்பதாலும், இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகு நாம் அதற்கு ஒரு புதிய பார்வையைத் தரப்போகிறோம் என்பதாலும், இந்தச் சட்டமுன்வடிவு அதிகமான கவனத்தையும், நம்முடைய விவாதத்தையும் ஈர்க்க வேண்டிய அவசியம் உள்ளதாக இருக்கிறது. எனவே, ஏற்கெனவே நம்முடைய பிரதான எதிர்க்கட்சி கேட்டுக்கொண்டபடியும், நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சி கேட்டுக்கொண்டபடியும், இந்தச் சட்டமுன்வடிவை ஓர் ஆய்வுக் குழுவிற்கு அனுப்பி, (குறுக்கீடு) Select Committee தான் ஆய்வுக் குழு— Select Committee-க்கு அனுப்பி, இதனுடைய உட்கூறுகளை, நாம் ஷரத்து ரீதியாக ஒவ்வொன்றையும் இன்னும் விவாதித்து, தேவைப்பட்டால் சட்ட ஆர்வலர்கள், காவல் துறையினுடைய முன்னாள் அதிகாரிகள், உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்ற நீதிபதிகளுடைய ஆலோசனைகளைப் பெற்று, இன்னும் அதிக பயன் தரக்கூடிய வகையிலே இந்தச் சட்டத்தை ஆய்வு செய்து நாம் நிறைவேற்றலாம் என்று காங்கிரஸ் கட்சி கருதுகிறது. எனவே, இந்தச் சட்டமுன்வடிவை ஆய்வுக் குழுவிற்கு, Select Committee-க்கு அனுப்ப வேண்டுமென்று இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சி அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது நன்கு ஆய்வு செய்யப்பட வேண்டும். அவசரமாக இதை நிறைவேற்றுவது எதிர்காலத்தில் நிறைவேற்றியவர்களுக்குமே சேர்த்து தீங்கு பயக்கும் என்று நாங்கள் கருதுகிறோம். எனவே, ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பட்டு, தீர ஆய்வு செய்த பிறகே இது நிறைவேற்றப்பட வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

திரு. தி. இராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, காவல் சட்டம் மாற்றப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது. ஆனால், கொடுக்கப்பட்டிருக்கின்ற ஷரத்துகள் முழுமையாக விளக்கப்பட்டு, அவை ஆய்வு செய்யப்பட வேண்டும். சட்டம் இயற்றியதற்குப் பிறகு அதை மாற்றுவது என்பது பெரும் சிரமம். எனவே, மக்களுக்குப் பயன்படக்கூடிய முறையில், சமூகப் பொருளாதார மாற்றத்திற்கு உகந்த முறையில் இந்தச் சட்டம் அமைய வேண்டும். அந்த அடிப்படையில் இதை ஆய்வுக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை Select Committee–க்கு அனுப்பி ஆய்வு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான சட்டமாக அமைந்திருக்கக்கூடிய காரணத்தால், இது குறித்து அ.தி.மு.க.வைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. அருண்மொழிதேவன் அவர்களும், காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.க. மணி அவர்களும், மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. நன்மாறன் அவர்களும், இந்திய கம்யூனிஸ்டு இயக்கத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்களும், ம.தி.மு.க.வைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சதன் திருமலைக்குமார் அவர்களும் இங்கே எடுத்து வைத்திருக்கக்கூடிய அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு இந்தச் சட்டமுன்வடிவை சட்டமன்றப் பேரவையினுடைய ஆய்வுக் குழுவிற்கு அனுப்புவதற்கு நம்முடைய பேரவைத் தலைவருடைய அனுமதியை வேண்டுகிறேன்.

2009 ஜூலை 21] [திரு. மு.க. ஸ்டாலின்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2008) Select Committee-யின் ஆய்வுக்கு அனுப்பப்பட வேண்டும்"

என்ற தீர்மானத்தினை தோழமைக் கட்சிகளின் வேண்டுகோளுக்கிணங்க, அதேபோல எதிர்க்கட்சிகளினுடைய கோரிக்கைகளுக்கிணங்க நான் இங்கே மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2008) ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்படுகிறது. ஆய்வுக் குழு (Select Committee) உறுப்பினர்கள் பின்னர் அறிவிக்கப்படுவார்கள். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் ஆய்வுக் குழுவின் தலைவராக இருந்து பணியாற்றுவார்கள்.

(இ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2009

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2009), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2009)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

@ 20–7–2009 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்